بسم الله الرحمن الرحيم

# ஸுன்னாஹ்வின் அடிப்படையில் மார்க்க கல்வி கற்றலும் கற்பித்தலும்

தொகுப்பு: ஆசிரியர் மௌலவி அப்துஸ் ஸமது அல்தாஃபி

## خطبة الحاجة

إِنَّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ، وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا، مَنْ يَهْدِهِ اللهُ فَلا مُضِلَّ لَهُ، وَمَنْ يُضْلِلْ فَلَا هَادِيَ لَهُ، وَأَشْهَدُ أَنْ لا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ.

الراوي : عبدالله بن مسعود، سنن الترمذي، (1105) المسند لأحمد بن حنبل، (3720)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ (3:102)

يَا أَيُّهَا النَّاسُ اتَّقُوا رَبَّكُمُ الَّذِي خَلَقَكُمْ مِنْ نَفْسٍ وَاحِدَةٍ وَخَلَقَ مِنْهَا زَوْجَهَا وَبَثَّ مِنْهُمَا رِجَالًا كَثِيرًا وَنِسَاءً وَاتَّقُوا اللَّهَ الَّذِي تَسَاءَلُونَ بِهِ وَالْأَرْحَامَ إِنَّ اللَّهَ كَانَ عَلَيْكُمْ رَقِيبًا (4:1)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللهَ وَقُولُوا قَوْلاً سَدِيدًا، يُصْلِحْ لَكُمْ أَعْمَالَكُمْ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ وَمَنْ يُطِعِ اللَّهَ وَرَسُولَهُ فَقَدْ فَازَ فَوْزًا عَظِيمًا (33:70-71)

أَمَّا بَعْدُ فَإِنَّ خَيْرَ الْحَدِيثِ كِتَابُ اللهِ، وَخَيْرَ الْهَدْيِ هَدْيُ مُحَمَّدٍ صلى الله عليه وآله وسلم، وَشَرَّ الأُمُورِ مُحْدَثَاتُهَا، وَكُلَّ مُحْدَثَةٍ بِدْعَةٌ، وَكُلَّ بِدْعَةٍ ضَلَالَةٌ، وَكُلَّ ضَلَالَةٍ فِي النَّارِ

الراوي: جابر بن عبدالله، أخرجه مسلم (867) والنسائي (1578)

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது. நாங்கள் அவனை புகழ்ந்து, அவனிடத்தில் உதவி தேடி, அவனிடமே பாவமன்னிப்பு கேட்கின்றோம். மேலும் எங்களின் உள்ளதாலும் செயலாலும் ஏற்படும் தீங்கிலிருந்து பாதுகாப்பு தேடுகின்றோம். அல்லாஹ் யாருக்கு நேர்வழியில் செலுத்துகின்றானோ! அவரை யாராலும் வழிகெடுக்க முடியாது, இன்னும் அல்லாஹ் யாரை வழிகேட்டில் விட்டு விட்டானோ! அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது.

வணக்கத்திற்கு தகுதியானவன் அல்லாஹ்வை தவிர வேறு யாருமில்லை! அவன் தனித்துவமானவன். அவனுக்கு எந்த இணை, துணையும் கிடையாது என்றும் முஹம்மது அல்லாஹ்வுடைய தூதர் எனவும் நான் சாட்சி கூறுகின்றேன்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) நூல்: திர்மிதி (1105) முஸ்னது அஹ்மது (3720).

நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வை-அவனைப் பயப்பட வேண்டிய முறைப்படி பயப்படுங்கள், மேலும், நிச்சயமாக (முற்றிலும்

அவனுக்குக் கீழ்ப்படிந்த) முஸ்லிம்களாகவே தவிர நீங்கள் மரணித்து விட வேண்டாம்.

அல்குர்ஆன் (3:102)

மனிதர்களே! நீங்கள் உங்கள் இரட்சகனுக்குப் பயந்து (நடந்து) கொள்ளுங்கள், அவன் உங்களை (யாவரையும்) ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அதிலிருந்து அதற்குரிய ஜோடியையும் படைத்தான், இன்னும் அவ்விருவரிலிருந்து அனேக ஆண்களையும், பெண்களையும் பரவச்செய்தான், இன்னும், அல்லாஹ்வை-அவனைக்கொண்டு (தமக்குரிய உரிமைகளை) நீங்கள் (ஒருவருக்கொருவர்) கேட்டுக்கொள்கிறீர்களே அத்தகையவனையும், மேலும் இரத்தக் கலப்பு சொந்தங்களை (த்துண்டித்து விடுவதை)யும் நீங்கள் பயந்து கொள்ளுங்கள், நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கண்காணிப்பவனாக இருக்கிறான்

அல்குர்ஆன் (4:1)

(ஆகவே) நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள், நேர்மையான கூற்றையே கூறுங்கள்.

(அவ்வாறு நீங்கள் செய்தால்) அவன் உங்களுடைய செயல்களை உங்களுக்குச் சீர் படுத்தி வைப்பான், உங்களுடைய குற்றங்களையும் மன்னிப்பான், மேலும் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் எவர் கீழ்ப் படிகின்றாரோ அப்போது அவர், திட்டமாக மகத்தான வெற்றியாக வெற்றியடைந்து விட்டார்.

அல்குர்ஆன் (33:70, 71)

உரைகளில் சிறந்தது அல்லாஹ்வின் வேதம் (குர்ஆன்) ஆகும். வழிகாட்டலில் சிறந்தது முஹம்மதின் வழிகாட்டலாகும். செயல்களில் தீயவை (மார்க்கத்தின் பெயரால்) புதிதாக உண்டாக்கப் படுபவை ஆகும். (மார்க்கத்தின் பெயரால் புதிதாக உருவாக்கப்படும்) ஒவ்வொரு (பித் அத்) புதுமையும் வழிகேடு ஆகும் ஒவ்வொரு வழிகேடும் நரகத்திற்கு அழைத்து செல்லக்கூடியவையாகும்.

அறிவிப்பாளர்: ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரலி) நூல்: ஸஹீஹ் முஸ்லிம் (867) நஸாயீ (1578).

அல்லாஹ்வுடைய சாந்தியும் சமாதானமும் அல்லாஹ்வின் தூதர் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவர்களைப் பின்பற்றிய உத்தம சத்திய ஸஹாபாக்கள் மீதும் முன்சென்ற ஸலஃபுஸ் ஸாலிஹீன்களின் மீதும் உண்டாகட்டுமாக! ஆமீன்.

ஒரு முஃமின் தன் வாழ்நாளில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் காட்டி தந்த முறையில் மார்க்கத்தை அறிந்து அதன் படி செயல்படுவதே ஸுன்னாஹ்வாகும். அதுவே இம்மை மறுமை வெற்றியாகும்.

அல்குர்ஆனில் அல்லாஹ் கூறியுள்ளான்:

قوله تعالى :قُلْ اَطِيْعُوا اللّٰهَ وَاَطِيْعُوا الرَّسُوْلَ فَاِنْ تَوَلَّوْا فَاِنَّمَا عَلَيْهِ مَا حُمِّلَ وَعَلَيْكُمْ مَّا حُمِّلْتُمْ وَاِنْ تُطِيْعُوْهُ تَهْتَدُوْا وَمَا عَلَى الرَّسُوْلِ اِلَّا الْبَلٰغُ الْمُبِيْنُ

(நபியே!) நீர் கூறுவீராக! அல்லாஹ்வுக்கு நீங்கள் கீழ்ப்படியுங்கள், அவனுடைய தூதருக்கும் நீங்கள் கீழ்ப்படியுங்கள், நீங்கள் (அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும் கீழ்படியாமல்) புறக்கணித்தால், (தூதருக்கு எந்த நஷ்டமுமில்லை) அவருடைய (கடமையெல்லாம்) தன் மீது சுமத்தப்பட்ட தூதை உங்களுக்கு எடுத்துரைப்பதுதான், உங்கள் மீதுள்ள (கடமையெல்லாம்) நீங்கள் (தூதரால்) எதை சுமத்தப்பட்டு (வழி நடத்தப்பட்டு) ள்ளீர்களோ! அதற்கு கீழ்ப்படிவ)துதான், மேலும், நீங்கள் அவருக்கு (தூதருக்கு) கீழ்ப்படிந்து நடந்தால் நீங்கள் (இம்மையிலும் மறுமையிலும்) நேர்வழியை அடைந்து விடுவீர்கள், (மக்களுக்கு) (நம் தூதைத்) தெளிவாக எடுத்துரைப்பதைத்தவிர, (வேறொன்றும் நம்) தூதர் மீது (கடமை) இல்லை.

அல்குர்ஆன்: 24:54.

وقوله تعالى :وَالسّٰبِقُوْنَ الْاَوَّلُوْنَ مِنَ الْمُهٰجِرِيْنَ وَالْاَنْصَارِ وَالَّذِيْنَ اتَّبَعُوْهُمْ بِاِحْسَانٍ رَّضِىَ اللّٰهُ عَنْهُمْ وَرَضُوْا عَنْهُ وَاَعَدَّ لَهُمْ جَنّٰتٍ تَجْرِىْ تَحْتَهَا الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَاۤ اَبَدًا ذٰ لِكَ الْفَوْزُ الْعَظِيْمُ

மேலும்! முதலாவதாக (சத்தியத்தை அடைந்து கொள்வதில்) முந்திக் கொண்டவர்களான முஹாஜிர்களையும் அன்ஸார்களையும் அவர்களை மனத்தூய்மையுடன் (முழுமையாக) பின்பற்றக்கூடியவர்களையும் அல்லாஹ் பொருந்திக்கொண்டான், அவர்களும் (அல்லாஹ்வாகிய) அவனை பொருந்திக்கொண்டனர், இவர்களுக்காக அவன் சுவன (இன்ப)ங்களை தயாராக்கிவைத்துள்ளான், அவற்றின் கீழ் ஆறுகள் (வற்றாமல்) ஓடிக்கொண்டே இருக்கும் அவர்கள், அவற்றில் நிரந்தரமாக(த் தங்கி) இருப்பார்கள், இதுதான் (வெற்றிகளில்) பெரும் மகத்தான வெற்றியாகும்.

(அல்குர்ஆன்: 9:100)

மேற்கண்ட வசனங்களின் அடிப்படையில் ஒரு முஃமின் தன் வாழ்நாளில் அல்லாஹ்வின் தூதர் காட்டி தந்த பாதையில் தான் வாழ்வை அமைத்து கொள்ள வேண்டும். நம்முடைய வாழ்வில் மன இச்சையின் படி

வாழ்வதோ! அல்லது கட்டுப்பாடின்றி மாற்று கலாச்சாரத்தைப் பின்பற்றி வாழ்வதோ கூடாது. அதில் எவ்வித பலனும் வெற்றியும் கிடையாது மாறாக அதில் உள்ளதெல்லாம் தோல்வியும் தண்டனையும் தான்.

எனவே! ஒரு முஃமின் தன் வாழ்வை ஸுன்னாஹ் முறையில் அமைத்துக் கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும்.

நமது வாழ்வை ஸுன்னாஹ்வின் படி அமைத்துக்கொள்வதற்கு சரியான வழிமுறையின் படி ஸுன்னாஹ்வை அறிந்திருக்க வேண்டும். ஸுன்னாஹ்வை அறியாமல் இருப்பது முஃமின்களது வாழ்வில் பாவத்தை ஏற்படுத்திவிடும்.

**ஸுன்னாஹ்வை அறிந்து அதை அடைந்து கொள்ளும் வழி முறையை பற்றி பல அறிஞர்கள் நமக்கு போதித்துள்ளார்கள்.**

இமாம் ஷம்சுத்தீன் அத்-தஹபீ (ரஹ்) அவர்கள் தங்களது புத்தகத்தில் ஒரு முஃமின் தனது மார்க்க அறிவை கொள்கையை அறிந்து கொள்வதன் மூலமே பெற வேண்டும் என்பதை தெளிவு படுத்தியுள்ளார்கள்.

الْمَقْصُودُ بِأَهْلِ السُّنَّةِ وَالجَمَاعَةِ: الصَّحَابَةُ، وَالتَّابِعُونَ، وَتَابِعُوهُمْ، ومَنْ سَلَكَ سَبِيلَهمْ، وَسَارَ عَلَى نَهْجِهُمْ، مِنْ أئِمَّةِ الْهُدى، وَمَنِ اقْتَدَى بِهِمْ مِنْ سَائِرِ الْأُمَّةِ أَجْمَعَيْن.

فَيَخْرُجُ بِهَذَا الْمَعْنَى كُلُّ طَوَائِفِ الْمُبْتَدِعَةِ وَأَهْلُ الْأَهْوَاءِ. فَالسَّنَةُ هِنَا فِي مُقَابِلِ الْبِدْعَةِ ، وَالْجَمَاعَةُ هِنَا فِي مُقَابِلِ الْفُرْقَةِ.

(كتاب العرش، للذهبي ١/٢٧)

அல்-குர்ஆனையும், அஸ்-ஸுன்னாவையும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து ஸஹாபாக்கள் எந்த அடிப்படையில் எவ்வித முரணுமில்லாமல் தூய்மையுடன் கற்றறிந்து செயல்பட்டார்களோ! அவ்வாறே அடுத்த தலைமுறையான ஸலஃப் அஸ்-ஸாலிஹீன்களான தாபியீன்களும், தபஉ தாபியீன்களும் இந்த உம்மத்தின் நேர்வழி பெற்ற தலை சிறந்த இமாம்களும் எவ்வாறு ஸஹாபாக்களிடமிருந்து அதை கற்றறிந்து கொண்டார்களோ! அவற்றை தூய்மையாக விளங்கி அவர்களின் அணுகு முறையை சரியான முறையில் புரிந்து அவற்றின் படி நமது நம்பிக்கைகளை (கொள்கை சார்ந்த அறிவை) அமைத்துக் கொள்வதே (சரியான மார்க்க அறிவை பெற உதவும.) அஹ்லுஸ் ஸுன்னாஹ் வல் ஜமாஅத் என்பதன் பொருளாகும்.

மேற்கூறிய கொள்கையில் மன இச்சைகளை பின்பற்றுகின்ற வழிதவறிய கூட்டங்களும், அவற்றில் பல பிரிவுகளாக இருப்பவர்களும் இந்த வரைவிலக்கிணத்திற்குட்படமாட்டார்கள்

எனவே அஸ்-ஸுன்னாஹ் என்பது வழிகேட்டிற்கு எதிரானதாகும்,

அல்-ஜமாஅத் என்பது மன இச்சையை பின்பற்றி சென்ற பிரிவுகளுக்கு எதிரானதாகும்".

நூல்: கிதாப் அல்-அர்ஷ், 1/27.

நூலாசிரியர்: இமாம் ஷம்ஸுத்தீன் அத்-தஹபீ (ரஹ்) (இறப்பு: ஹிஜ்ரி 748)

எனவே நாம் சரியான மார்க்க அறிவைப் பெற வேண்டுமென்றால் யாரெல்லாம் மேற்கண்ட வரைவிலக்கினத்திற்கு உட்படுவார்களோ! அந்த நல்லறிஞர்களிடம் தான் நாம் கல்வி பெற வேண்டும். அதுவே ஸுன்னாஹ்வாகும்.

அதை தவிர்த்து விட்டு வெறும் ஜுமுஆ பயான்களில், அல்லது மார்க்கப் பிரச்சார மேடைகளில் அல்லது பொதுவான தலைப்புகளில் உள்ள இஸ்லாமிய புத்தகங்களை ஓரளவு வாசிப்பதாலும் மார்க்கத்தை சரியான முறையில் அறிந்து கொண்டதாக ஆகி விட முடியாது.

இதுவெல்லாம் மார்க்க விஷயங்களை நினைவுபடுத்தும் இடங்களே, ஆனால் மார்க்க அறிவை கற்றுக்கொள்வதற்கும் கற்றுக்கொடுப்பதற்கும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் நமக்கு வழி முறைகளை கற்றுத்தந்துள்ளார்கள்.

திருமணம், குழந்தை வளர்ப்பு, வியாபாரம் போன்ற நமது அன்றாட வாழ்க்கை விஷயங்களில் மார்க்கம் மிக விரிவான வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. ஆனால் அவற்றை நாம் அறிந்து, கற்றுக் கொண்டு, நடைமுறைப்படுத்துவதற்கான முறைகள் இருக்கின்றன என்பதையே பல நேரங்களில் நாம் கவனிக்காமல் விடுகிறோம்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இந்த மார்க்க கல்வி பெறப்படும் வழிமுறைகளை பற்றி கூறும்போது கீழ்கண்டவாறு வழிகாட்டினார்கள்.

قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ: تسمَعونَ ويُسمَعُ منكم ويُسمَعُ ممَّن سمِع منكم.

الراوي : عبدالله بن عباس .أخرجه أبو داود (٣٦٥٩)، وأحمد (٢٩٤٧) البحر الزخار (١١/٢٦٦)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: (இப்போது என்னிடமிருந்து) நீங்கள் (மார்க்க கல்வியை) செவியுறுகின்றீர்கள். (பிற்காலத்தில் இக்கல்வி) உங்களிடமிருந்து செவியுறப்படும். (அதன்பின்) உங்களிடம் கேட்டவர்களிடமிருந்து செவியுறப்படும். (இவ்வாறே இது தொடருந்து கொண்டே இருக்கும்)

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி)

நூல்: அபூதாவூத்: 3659, முஸ்னது அஹ்மது 2947, அல்பஹ்ருஸ் ஸஹ்ஹார் 11/266.

மேற்கண்ட ஹதீஸ் "ஸஹீஹ் அபூ தாவூத்" எனும் மேலாய்வு நூலில் இமாம் அல்பானி (ரஹ்) அவர்கள் ஸஹீஹ் தரத்தில் (3659) பதிவு செய்துள்ளார்கள்.

இவ்வாறு மார்க்க கல்வி என்பது முதலில் அல்லாஹ்வுடைய தூதரிடமிருந்து ஸஹாபாக்களுக்கும் பின்பு அவர்களிடமிருந்து தாபியீன்களுக்கும் பின்பு அவர்களிடமிருந்து தபஉ தாபியீன்களுக்கும் பின்பு அவர்களிடமிருந்து அடுத்த தலைமுறை மாணவர்களுக்கும் இவ்வாறு இறுதி வரைக்கும் இந்த  மார்க்க கல்வி சென்று கொண்டே இருக்கும்.

இந்த அடிப்படியில் மார்க்கத்தின் கல்விகளை சுமந்தவர்களையே அஹ்லுஸ்ஸுன்னாஹ் அறிஞர்கள் என்றழைக்கப்படுகின்றனர்.

ஒவ்வொரு காலத்திலும் இது போன்ற மார்க்க அறிவை பெற்ற பல அறிஞர்களை அந்தந்த காலத்தில் சமூகம் சந்தித்துள்ளது, பின்னாளில் மார்க்கத்தில் குழப்பம் ஏற்பட்டு பல பிரிவுகளாக சமூகம் சிதறடிக்கப்பட்டு இருந்த போதும் மக்கள் தங்கள் வாழும் காலங்களில் சரியான அஹ்லுஸ்ஸுன்னாஹ் அறிஞர்களை கண்டறிந்து அவர்களிடம் கல்வியை பெற்று கொண்டனர்.

இதனடிப்படையில் மக்கள் கல்வியை பெறுவதே குழப்பதில் இருந்து காக்க உதவும்.

இந்த முறையில் கல்வியை பெற்ற அஹ்லுஸ்ஸுன்னாஹ் அறிஞர்களிடத்தில் தாங்கள் யாரிடமிருந்து கல்வியை கற்றார்கள் அவர்களது ஆசிரியர் யார் அவருடைய மார்க்க கல்வியின் தரம் என்ன என்பதை அறிந்து அதனை தனது மாணவர்களுக்கு எடுத்துரைப்பார்கள். அறிஞர்களிடத்தில் இதற்க்கு பெயர் "ஸனது" அல்லது "அல்இஸ்னாது" என்று அழைப்பார்கள்.

எனவே யாரிடத்தில் இந்த "ஸனது" எனும் தங்களின் கல்விக்கான சங்கிலித்தொடர் வரிசை பெற்றுள்ளாரோ! அவர் தங்களின் ஆசிரியரின் அறிவுத்தலின் பேரில் மக்களுக்கு மார்க்க கல்வியை போதிப்பார்.

இந்த முறையில் கல்வி கற்பதும் கற்பிப்பதும் ஸுன்னாஹ்வின் அறிவை பரிபூரணமான முறையில் அறிந்து கொள்ள உதவும்.

ஆனால் சமகாலத்தில் இந்த "இஜாஸா" எனும் கல்வி பெற்றதற்கான சான்றிதழ் மற்றும்  "தஸ்கியா" எனும் துறை சார்ந்த அனுமதி இவற்றை பற்றியெல்லாம் பொது மக்களுக்கு விழிப்புணர்வு இல்லாமல் இருப்பதால் பொது மக்கள் யாரிடமிருந்து தங்களுக்கான மார்க்க அறிவை பெறுவது என்பது பற்றி தீர்க்கமான அடிப்படை அறிவை பெறாததினால்

யாரெல்லாம் மீடியாக்களில் மற்றும் பொது மேடைகளில் மார்க்கம் பேசுகின்றார்களோ! அவர்களை அறிஞர்கள் தரத்தில் உள்ளவர்கள் என்று எண்ணி அவர்களிடம் சென்று மார்க்கத்தை கேட்டுப் பெறுகிறார்கள். இது மிகப்பெரிய குழப்பத்தை ஏற்படுத்திவிடும் என்பதை பொது மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

## ஸனதுகளை பற்றி (அதன் வழியாக கல்வியை பெறுவதின் அவசியத்தை பற்றி) அஹ்லுஸ் ஸுன்னாஹ் அறிஞர்களின் உபதேசங்களும் முடிவுகளும்

عَبْدَ اللهِ بْنَ الْمُبَارَكِ يَقُولُ: الْإِسْنَادُ مِنَ الدِّينِ، وَلَوْلَا الْإِسْنَادُ لَقَالَ مَنْ شَاءَ مَا شَاءَ.

الكتاب: صحيح مسلم،( ١٢/١)

இமாம் அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) (இறப்பு: ஹிஜ்ரி 181) அவர்கள் கூறினார்கள்: (இஸ்னாத்) அறிவிப்பாளர் தொடர் (வரிசை) மார்க்கத்தின் ஓர் (தவிர்க்க முடியாத) பகுதியாகும். அறிவிப்பாளர் தொடர் (இஸ்னாத்) மட்டும் இருந்திருக்காவிட்டால் (மார்க்கத்தில்) தகுதியில்லாதவர்கள் நினைத்ததையெல்லாம் சொல்லி (மக்களை குழப்பி) யிருப்பார்கள்.

நூல்: ஸஹீஹ் முஸ்லிம், (1/12)

عَنْ مُحَمَّدِ بْنِ سِيرِينَ قَالَ: إِنَّ هَذَا الْعِلْمَ دِينٌ فَانْظُرُوا عَمَّنْ تَأْخُذُونَ دِينَكُمْ.

الكتاب: صحيح مسلم (١١/١)

இமாம் முஹம்மத் இப்னு ஸீரின் (ரஹ்) (இறப்பு: ஹிஜ்ரி 110) அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக இந்த (நபிமொழி) க்கல்வி (யை கற்றுக்கொள்வது) மார்க்கம் தான். எனவே, உங்களுடைய மார்க்க கல்வியை எவரிடமிருந்து பெறுகிறீர்களோ! அவரை (குறித்தும் அவருடைய ஆசிரியரை குறித்தும்) நன்கு அறிந்து கொள்ளுங்கள்.

நூல்: ஸஹீஹ் முஸ்லிம், (1/11)

سَمِعْتُ عَبْدَ اللَّهِ بْنَ الْمُبَارَكِ، وَسُئِلَ هَلْ لِمَنْ يَطْلُبُ الْعِلْمَ لِلَّهِ أَنْ يُشَدِّدَ فِي الإِسْنَادِ؟ قَالَ: نَعَمْ، يَنْبَغِي لِمَنْ يَطْلُبُ الْعِلْمَ لِلَّهِ أَنْ يَكُونَ فِي الإِسْنَادِ أَشَدَّ وَأَشَدَّ.

الكتاب: التاسع من فوائد (أبي عثمان البحيري) (صفحة: ١٣ رقم: ١٢)

அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) (இறப்பு: ஹிஜ்ரி 181) அவர்களிடம் "அல்லாஹ்விற்காக மார்க்க அறிவைத் தேடும் ஒரு மாணவர் ஸனதுடைய விஷயத்தில் கண்டிப்புடன் இருக்க வேண்டுமா? எனக் கேட்கப்பட்ட போது: "ஆம், அல்லாஹ்விற்காக மார்க்க அறிவைத் தேடும் ஒரு மாணவர், (தன்னுடைய கல்வியை சரியான முறையில் பேணுவதற்கு) ஸனதுடைய விஷயத்தில் மேலும் மேலும் கண்டிப்புடன் (கவனுத்துடன்) இருக்க வேண்டும்.

நூல்: அத்-தாஸி.ஃ மினல் ஃபவாயித் (எண் 12, பக்கம் 13)

நூலாசிரியர்: இமாம் அபூ உஸ்மான் அல்-புஹைரிய் (ரஹ்) (இறப்பு: ஹிஜ்ரி 451)

وقال الحافظ يزيد بن زريع: لِكُلِّ دِينٍ فُرْسَانٌ وَفُرْسَانُ هَذَا الدِّينِ أَصْحَابُ الْأَسَانِيدِ.

الكتاب: سير أعلام النبلاء: ٨/٢٦٤. (شمس الدين الذهبي)

யஸீத் இப்னு ஸுரைஃ (ரஹ்) (இறப்பு: ஹிஜ்ரி 182) அவர்கள் கூறினார்கள்: ஒவ்வொரு சமூகத்திற்கும் (அதை காக்கும்) மாவீரர்கள் உள்ளனர் இந்த மார்க்கத்தின் மாவீரர்கள் (சரியான மார்க்க அறிவை பெற்ற) ஸனதுகளுடைய பேரறிஞர்கள் ஆவர்.

நூல்: ஸியரு அஃலாமின் நுபலா, (8/264)

நூலாசிரியர்: இமாம் ஷம்சுத்தீன் தஹபீ (ரஹ்) (இறப்பு: ஹிஜ்ரி 748)

وقال ابن المبارك: مَثَلُ الَّذِي يَطْلُبُ أَمْرَ دِينِهِ بِلَا إِسْنَادٍ كَمَثَلِ الَّذِي يَرْتَقِي السَّطْحَ بِلَا سُلَّمٍ.

الكتاب: الكفاية في علم الرواية : ٣٩٣ (الإمام الخطيب البغدادي)

இமாம் அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்) (இறப்பு: ஹிஜ்ரி 181) அவர்கள் கூறினார்கள்: மார்க்கத்தில் ஏதேனும் ஒரு கல்வியை (அதற்கான) ஸனது இல்லாமல் தேடுபவரின் உதாரணம், ஏணியே இல்லாமல் (அல்லது படியே இல்லாமல் வீட்டின்) கூரையில் ஏறுவது போலாகும்.

நூல்:அல்-கிஃபாயா ஃபீ இல்மிர் ரிவாயா, பக்கம் 393.

நூலாசிரியர்: இமாம் அல்-கதீப் அல்-பக்தாதி (ரஹ்) (இறப்பு: ஹிஜ்ரி 463)

அதாவது ஒரு வீட்டின் மாடிக்கு நாம் செல்வதானால் அதன் படியின் வழியாகவே செல்ல முடியும். ஏணியோ அல்லது படியோ இல்லாமல் எப்படி ஒரு வீட்டின் மாடிக்கு நாம் செல்ல முடியாதோ!

அது போலவே மார்க்கத்தை முறையாக கற்க வேண்டும் என்றால் ஸனதுகளை பெற்ற அஹ்லுஸ்ஸுன்னாஹ் அறிஞர்களிடம் கல்வி பயின்று அதற்கான அனுமதியும் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளவரே! ஸுன்னாஹ்வின் இல்மையும் அதை கற்பிப்பதற்கான தகுதியும் அடைய முடியும்.

وَالْإِسْنَادُ مِنْ خَصَائِصِ هَذِهِ الْأُمَّةِ، وَهُوَ مِنْ خَصَائِصِ الْإِسْلَامِ، ثُمَّ هُوَ فِي الْإِسْلَامِ مِنْ خَصَائِصِ أَهْلِ السُّنَّةِ.

وَالرَّافِضَةُ مِنْ أَقَلِّ النَّاسِ عِنَايَةً، إِذْ كَانُوا لَا يُصَدِّقُونَ إِلَّا بِمَا يُوَافِقُ أَهْوَاءَهُمْ.

الكتاب: منهاج السنة النبوية (٧ /٣٧) (شيخ الإسلام الإمام ابن تيمية)

அல்-இஸ்னாது என்பது இஸ்லாத்தின் இந்த உம்மத்தின் (மார்க்க) பண்புகளில் ஒன்றாகும், மேலும் அஹ்லுஸ்ஸுன்னாஹ்வினரின் பண்புகளும் அதுவே ஆகும். (இஸ்லாத்தில் வழிகெட்ட பிரிவுகளில் ஒன்றான) ராஃபிளாக்கள் (எனும் பிரிவினர்) இந்த இஸ்னாதுடைய விவகாரங்களில் கவனம் தராத மக்களாகவே உள்ளனர், ஏனெனில்

அவர்களுக்கு (சாதகமான விஷயத்தில்) தங்கள் மன இச்சையுடன் ஒத்துப்போகக்கூடிய (மார்க்க விஷயங்களை) மட்டுமே உண்மையென்று ஏற்றுக்கொள்கின்றார்கள். (மற்றவைகளை நிராகரிக்கின்றார்கள்)

நூல்: மின்ஹாஜுஸ்ஸுன்னத்தின் நபவிய்யா, (7/37)

நூலாசிரியர்: இமாம் இப்னு தைமிய்யா (ரஹ்) (இறப்பு: ஹிஜ்ரி 728)

**மார்க்க கல்வியை பெற்றுக் கொள்ளும் முறையும் அதற்கான வழிகாட்டுதலும்.**

ஒரு மாணவர் மார்க்க கல்வியை கற்பதற்கு அடிப்படையான சில விஷயங்களை அறிந்து வைத்திருக்க வேண்டும். ஒரு மாணவர் தன் ஆசிரியரின் தகுதிகள் குறித்து அறிந்து கொள்ள வேண்டும். தான் எதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளோமோ! அதை மட்டும் செய்ய வேண்டும். ஆசிரியரின் அனுமதியில்லாமல் எந்த இடத்திலும் தன்னை முன் நிறுத்தக்கூடாது.

ஆசிரியரின் அறிவுறுத்தலின் பேரில் தான் கல்வியை கற்பிக்க வேண்டும். இவற்றையெல்லாம் சரியான முறையில் அடைய வேண்டும் என்றால் அவர் "தஸ்கியா" வை பற்றி அறிந்திருக்க வேண்டும்.

"தஸ்கியா" என்பது (ஸனது பெற்ற ஒரு அஹ்லுஸ்ஸுன்னாஹ்) ஆசிரியர் தன் மாணவரை பற்றி நல்லெண்ண சான்றிதழ் அளிப்பது, தன் மாணவரை குறித்து அவரின் கல்வியை குறித்து ஆசிரியரே நன்கு அறிந்தவர், எனவே தன் மாணவரின் தகுதிக்கு தகுந்தாற் போல் சமூகத்தில் மார்க்க கல்வி பணிக்கு அனுமதி வழங்குவார். அந்த அனுமதியின் அடிப்படையில் மாணவர் செயல்படுவார். இவற்றையே "தஸ்கியா" (நற் சான்றிதழ்) என கூறப்படும்.

இஸ்லாமிய சகோதர, சகோதரிகள் இவற்றை குறித்து தெளிவாக அறிந்து கொள்வது அவசியமாகும்.

قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ :خَيْرُ أُمَّتِي قَرْنِي، ثُمَّ الَّذِينَ يَلُونَهُمْ، ثُمَّ الَّذِينَ يَلُونَهُمْ

الراوي: عمران بن الحصين، صحيح البخاري (٣٦٥٠)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என் சமுதாயத்தாரில் சிறந்தவர்கள் என்னுடைய தலைமுறையினரே. பிறகு, (சிறந்தவர்கள்) அவர்களை அடுத்து வரும் தலைமுறையினர் ஆவர். அதற்கு அடுத்து (சிறந்தவர்கள்) அவர்களையடுத்து வரும் தலைமுறையினர் ஆவர்.

அறிவிப்பாளர்: இம்ரான் இப்னு ஹுஸைன் (ரலி)

நூல்: ஸஹீஹுல் புஹாரி (3650)

மேற்கண்ட ஹதீஸில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஸஹாபாக்களை குறித்தும் அவர்களிடத்தில் பயின்ற தாபியீன்களை

குறித்தும் இன்னும் அவர்களிடத்தில் கல்வி பயின்ற தபஉ தாபியீன்களை குறித்தும் சிறப்பித்து கூறியுள்ளார்கள்.

தனக்கு பிறகு இந்த சமூகம் யாரை பின்பற்ற வேண்டும் யாருடைய வழிகாட்டுதலை எடுத்து கொள்ள வேண்டும் என்பதை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் வாழும் காலத்திலேயே அறிவித்து விட்டு சென்றுள்ளார்கள். அதை பற்றி பிடித்து வாழ்வதே நமக்கு இம்மையிலும் மறுமையிலும் நன்மை பயக்கும்.

இந்த உம்மத்தில் தலைசிறந்த மூன்று நூற்றாண்டுகளை சார்ந்த அறிஞர்களிடத்தில் கல்வி பயின்று பிறகு அந்த கல்வியை சுமந்து அடுத்த தலைமுறை மக்களிடம் கொண்டு சேர்த்து ஒவ்வொரு காலத்திலும் இந்த மார்க்க கல்வியை தூதரின் வழிகாட்டுதலோடு பாதுகாத்து மக்களை ஸுன்னாஹ்வின் பால் வழிநடத்தும் அறிஞர்களிடத்தில் தான் நாம் மார்க்க கல்விகளை கற்க வேண்டும்,

நமது மார்க்க சந்தேகங்களை கேட்க வேண்டும், பொது மக்களாகிய நமக்கு இது போன்ற மார்க்க நடைமுறை தெரியாததால் (ஜாஹில்களாகிய) முட்டாள்களிடத்தில் மார்க்க அறிவை பெற்று கொண்டு நம்முடைய வாழ்க்கையை வழி நடத்திக் கொண்டிருக்கிறோம்.

இது மிகப்பெரும் குழப்பத்தில் கொண்டு போய் சேர்க்கும். என்பதை நாம் அறிந்து கொள்ள முயற்சி எடுக்க வேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான்:

قوله تعالى: فَلَا تُزَكُّوْۤا اَنْفُسَكُمْ هُوَ اَعْلَمُ بِمَنِ اتَّقٰى.

நீங்களே உங்களை (தூய்மையானவர்களென எண்ணிக்கொண்டு) பரிசுத்தப்படுத்திக் கொள்ளவேண்டாம். (உங்களில்) பயபக்தியுடையவர் யார் என்பதை அவனே நன்கறிவான்.

(அல்குர்ஆன்: 53:32)

சம காலத்தில் சிலர் மக்களுக்கு மத்தியில் தங்களை தூய்மைப்படுத்தி காட்டி கொள்வதற்காகவே தங்களின் சொற்ப கல்வியறிவை பயன்படுத்தி மக்களை குழப்பத்தில் ஆழ்த்தி வருகிறார்கள்.

قوله تعالى: فَسْـَٔلُوْۤا اَهْلَ الذِّكْرِ اِنْ كُنْتُمْ لَا تَعْلَمُوْنَ.

நீங்கள் அறியாதவர்களாக இருந்தால் அறிந்தவர்களிடம் கேட்டு(த் தெரிந்து)க் கொள்ளுங்கள்.

(அல்குர்ஆன்: 16:43)

மேற்கண்ட வசனத்தில் "அஹ்லுத்-திக்ர்" என்பதன் பொருள் பற்றியும் யாரிடத்தில் மார்க்க கல்வியை கற்க வேண்டும் (அல்லது) யாரிடத்தில் மார்க்க சந்தேகங்களை கேட்க வேண்டும் என்பதை பற்றியும் சம கால

ஹதீஸ் கலை துறையின் பேரறிஞரும், மார்க்க சட்ட மேதையுமான இமாம் நாஸிருத்தீன் அல்பானி (ரஹ்) அவர்கள் கீழ் வருமாறு விளக்கமளித்துள்ளார்கள்.

من هم أهل الذكر؟

فأهل الذكر هم أهل القرآن, وأهل القرآن ليسوا هم الذين يقرأون القرآن ويحسنون تقويمه وقراءته جيدا ثم لا يكادون يفقهون منه شيئا ولو قليلا هؤلاء ليسوا هم أهل القرآن, أهل القرآن الذين أثنى عليهم رسول الله صلى الله عليه وآله وسلم في حديث خاص ألا وهو قوله: ( أهل القرآن هم أهل الله وخاصته ) ( أهل القرآن هم أهل الله وخاصته ) هم الذين يفهمون القرآن ويفسرونه على ما كان عليه زمن نزوله على قلب النبي عليه الصلاة والسلام أي على ما كان عليه سلفنا الصالح هؤلاء هم

أهل الذكر الذين يجب على عامة المسلم.أن يسألوهم.

الكتاب: سلسلة الهدى والنور (٤٩٩) (الشيخ ناصر الدين الألباني)

கேள்வி; அஹ்லு-த்-திக்ர் என்பவர்கள் யார்?

அஹ்லு-த்-திக்ர் என்பவர்கள் அஹ்லுல்- குர்ஆன் (குர்ஆனை சார்ந்தவர்கள்) என்று பொருள்.

அதாவது குர்ஆனில் உள்ள மார்க்க அடிப்படை சட்டங்களை சிறிதளவு கூட புரிந்துகொள்ளாமல் (அல்லது அதை கற்றுக்கொள்ள எந்த முயற்சியும் எடுக்காமல்) வெறுமனே குர்ஆனை அழகிய முறையில் ஓதுபவர்களும் இன்னும் அதை மேம்படுத்திக்கொள்பவர்களும் (அஹ்லுல்- குர்ஆன்) குர்ஆனை சார்ந்தவர்கள் அல்ல. மாறாக! அந்த குர்ஆனுடைய மக்கள் யாரென்றால் அவர்களைப்பற்றி அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஒரு குறிப்பிட்ட ஹதிஸில் புகழ்ந்து கூறியுள்ளார்கள்.

( أَهْلُ القرآنِ، أَهْلُ اللَّهِ وخاصَّتُهُ )

பொருள் ; குர்ஆனுடையவர்கள் யாரென்றால் அவர்கள் அல்லாஹ்வை (மட்டும்) சார்ந்திருப்பவர்கள். அவனின் தனிப்பெரும் கிருபையை அடைந்த சிறப்பை பெற்றவர்கள்.

(அறிவிப்பாளர்; அனஸ் (ரலி)

நூல்; இப்னு மாஜஹ், 179.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் உள்ளத்தில் அல்லாஹ் எவ்வாறு வஹீயை அறிவித்தானோ! (எவ்வித முரண்பாடில்லாமல்) அதை பரிசுத்தமாக விளங்கி மக்களுக்கு எடுத்துரைத்துவர்கள்! அதாவது சிறப்புமிக்க முன்னோர்களான (ஸலஃபுஸ்-ஸாலிஹீன்கள்) இஸ்லாமிய

அடிப்படை கொள்கையிலும் மார்க்க சட்டங்களிலும் தலை சிறந்து விளங்கியவர்கள். இவர்கள் தான் அஹ்லு-த்-திக்ர் ஆவார்கள்.

இவர்களிடமே! இஸ்லாமிய பொது மக்கள் தங்கள் மார்க்க சட்டங்களின் தீர்வை பெற வேண்டும். இன்னும் இவர்களிடமே மார்க்க கல்வியையும் கற்க வேண்டும்.

நூல் ; ஸில்ஸிலத்துல் ஹுதா வந் நூர், (499)

நூலாசிரியர்: இமாம் நாஸிருத்தீன் அல்பானி (ரஹ்)

எனவே இஸ்லாமிய பொதுமக்கள் தங்களின் இம்மை மறுமை வாழ்வு பாதுகாக்கப்பட வேண்டும் என்றால் தங்களின் மார்க்க கல்வியை முறையாக அறிந்த எந்த இயக்கத்திலும் ஈடுபடாத அஹ்லுஸ்ஸுன்னாஹ் அறிஞர்களிடத்தில் தேடி பெற வேண்டும்.

ஆரம்ப கால அறிஞர்களிடத்தில் இருந்து சம கால அறிஞர்கள் வரை இந்த அடிப்படையிலே கல்வி பெற வேண்டும் என்பதையும் அதுவே ஸுன்னாஹ் என்பதையும் வலியுறுத்தியுள்ளார்கள்.

இதை தவிர்த்து விட்டு அறிஞர்களிடம் அமர்ந்து கல்வி பெறாமல் ஜூம்ஆ மேடைகளில் அல்லது பொதுவான தலைப்பு கொண்ட இஸ்லாமிய நூல்களை படித்து விட்டு அல்லது மார்க்க பிரச்சார மேடைகளில் அல்லது சமூக வலை தளங்களில் போன்ற இடங்களில் மார்க்க கல்வியை கற்க கூடாது,

அது மார்க்க கல்வி கற்கும் நடைமுறை அல்ல. நம் சமூகத்தில் மார்க்கத்தை அறியாத ஒரு சிலர் தாங்கள் இஸ்லாமிய அழைப்பாளர்கள் என்ற போர்வையில் மக்களிடம் இஸ்லாமிய (தமிழ் அல்லது உர்து அல்லது அரபு மொழி கொண்ட) புத்தகங்களை வாசித்து விட்டு அறிஞர்களாக தங்களை காண்பித்து மக்களை குழப்பி கொண்டு வருகின்றார்கள்.

அவர்கள் பல ஆயிரம் புத்தகங்களை படித்தாலும் அது புத்தக அறிவே! தவிர ஸுன்னாஹ் அங்கீகரித்த அறிவு இல்லை, என்பதே நிதர்சனமான உண்மை. மக்கள் இவற்றிலிருந்து மீள வேண்டும்.

قال الشيخ صالح الفوزان (حفظه الله تعالى)

والأشخاص الذين ينتسبون إلى الدعوة يجب أن يُنظر فيهم أين دَرَسوا؟ ومن أين أخذوا العلم؟ وأين نشأوا ؟ وما هي عقيدتهم؟ وتنظر أعمالهم وآثارهم في الناس وماذا أنتجوا من الخير؟ وماذا ترتب على أعمالهم من الإصلاح؟ يجب أن تدرس أحوالهم قبل أن يُغتر بأقوالهم ومظاهرهم، هذا أمر لا بد منه، خصوصا في هذا الزمان الذي كثر فيه دعاة الفتنة.

الكتاب: الإجابات المهمة في المشاكل العلمة (ص.٣٤)

தற்காலத்தில் வாழ்ந்து வரும் அஹ்லுஸ்ஸுன்னாஹ் அறிஞர்களில் ஒருவரான சவூதியை சேர்ந்த முஃப்தி அஷ்-ஷேக் ஸாலிஹ் அல் ஃபவ்ஸான் (ஹஃபிழஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

அழைப்புப் பணியை சுமந்திருப்பதாக கூறும் நபர்களை குறித்து (பின்வரும் கேள்விகளைக் கொண்டு பொது மக்கள்) ஆராய்வது கட்டாயக் கடமை ஆகும்:

1. அவர்கள் மார்க்கக் கல்வியை எங்கு படித்தார்கள்?

2. யாரிடமிருந்து கல்வியை பெற்றுக் கொண்டார்கள்?

3. எங்கு வளர்த்தெடுக்கப்பட்டார்கள்?

4. அவர்களுடைய கொள்கைகள் என்ன?

அவர்களுடைய செயல்களையும் மக்கள் மீது அவர்கள் ஏற்படுத்திய விளைவுகளையும் ஆராய வேண்டும்.

5. என்ன நலவுகளை அவர்கள் ஏற்படுத்தினார்கள்?

6. அவர்களுடைய செயல்கள் எவ்வாறான திருத்தல்களை மக்களுக்கு மத்தியில் ஏற்படுத்தி இருக்கிறது?

பொது மக்கள் ஒருவருடைய சொல்லாலும் வெளிப்படையான செயல்களாலும் வழிதவறிச் செல்வதற்கு முன் அவரைக் குறித்து (மேற்கூறப்பட்ட) அனைத்து காரியங்களையும் நாம் ஆராய்வது கட்டாயமாகும். குறிப்பாக தற்காலத்தில் குழப்பம் (ஃபித்னா) ஏற்படுத்தும் அழைப்பாளர்கள் அதிகமாக இருக்கும் காரணத்தினால். இது பற்றி அறிந்து கொள்வது நமக்கு கடமையாகும்.

நூல்; அல் -இஜாபாத்துல்- முஹிம்மா ஃபீ மஷாகிலில்- முலிம்மா (பக்கம் 34)

நூலாசிரியர்: சமகால சட்டமேதை அஷ்-ஷேக் ஸாலிஹ் அல்- ஃபவ்ஸான் (ஹஃபிழஹுல்லாஹ் தஆலா)

எனவே மக்கள் தங்கள் மார்க்க கல்வி குறித்து விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்பதை நினைவு படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தங்களின் கல்வி குறித்து கீழ் கண்டவாறு துஆ செய்வார்கள்.

أنَّ النَّبيَّ ﷺ كانَ يقولُ: (اللَّهُمَّ إنِّي أَعُوذُ بكَ مِن عِلْمٍ لا يَنْفَعُ، ومِن قولٍ لا يُسمَعُ).

الراوي: أنس بن مالك, شرح السنة (١٣٥٩) (الحسين بن مسعود البغوي)

யா அல்லாஹ்! பயனற்ற கல்வியை விட்டும், செவி தாழ்த்தப்படாத சொல்லை விட்டும் உன்னிடத்தில் பாதுகாப்பு தேடுகிறேன்.

அறிவிப்பாளர்; அனஸ் (ரலி)

நூல்; ஷரஹுஸ் ஸுன்னாஹ் 1359.

நூலாசிரியர்: இமாம் ஹுஸைன் இப்னு மஸ்ஊத் அல்-பகவி (ரஹ்) இறப்பு: ஹிஜ்ரி 516)